2017 மார்ச் 21]

அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி, ஏற்கெனவே உள்ள பழைய மருத்துவமனையை எப்படி பயன்படுத்துவது என்பது குறித்து அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

வேளாண்மைக் கல்லூரி

***4461—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல், மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள் இங்கே வினா எழுப்பியிருக்கிறார்கள். ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.*

[2017 மார்ச் 21

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என தமிழர்களின் மனதில் நீங்காத இடம் பெற்ற தங்கத் தாரகை, இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வராய் இருந்த திசை நோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும், அருகில் இருக்கக்கூடிய பெரம்பலூர், நாமக்கல், விழுப்புரம், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களிலும் இது நாள் வரை வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்படவில்லை. வருடா வருடம், இந்த மாவட்டங்களில் உள்ள மாணவ–மாணவியர் வேளாண்மைக் கல்லூரியில் படிக்க வேண்டும் என்றால், நீண்ட தூரம் சுமார் 200 முதல் 300 கிலோ மீட்டர் வரை சென்று, கோவையில் படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. தமிழ்நாட்டில் வேளாண்மைக் கல்லூரிகளும் குறைவாக உள்ளன. இந்த ஆறு மாவட்டங்களிலும், இந்தியாவின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயத் தொழில் அதிக அளவில் நடைபெறுகின்ற காரணத்தினால், அரசு வேளாண்மைக் கல்லூரி ஒன்றை அமைத்தால், மாணவ–மாணவியர் வேலைவாய்ப்பு பெறவும், விவசாயிகள் அதிக அளவில் மகசூல் பெறவும் முடியும். தமிழ்நாட்டினுடைய உணவுப் பாதுகாப்பினை மேலும் உறுதி செய்யவும் முடியும். எனது இந்தத் தொகுதியில் ஒரு கோடி நபர்கள் வாழ்ந்து வருகிறார்கள். தொகுதியில் அரசு கலைக் கல்லூரியோ, தொழிற்சாலையோ, சிப்காட்டோ, கனரக தொழிற்சாலையோ எதுவுமேயில்லாத நிலையில், அரசு வேளாண்மைக் கல்லூரியை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டுமென்றால், குறைந்தது ரூபாய் 50 கோடி நிதியும், 110 ஏக்கர் விவசாய நிலமும், ஒரு பட்டப்படிப்பிற்குத் தேவைப்படுகிறது. அதிகப்படியான ஒவ்வொரு பட்டப்படிப்பிற்கும், 50 ஏக்கர்

2017 மார்ச் 21]

அதிகப்படியான நிலம் தேவை. மேலும், ஆத்தூர் தொகுதிக்கு அருகில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருவண்ணாமலையில் வாளவச்சனூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் தனியார் வேளாண்மைக் கல்லூரியான அதியமான் வேளாண்மைக் கல்லூரியும், நாமக்கல் மாவட்டத்தில் பி.ஜி.பி. வேளாண் அறிவியல் கல்லூரியும் இயங்கி வருகின்றன. ஆத்தூர் தொகுதி மாணவர்கள் இக்கல்லூரிகளைத் தேர்வு செய்து பயன் பெறலாம். மேலும், வேளாண்மை சார்ந்த சந்தேகங்களுக்கு மேற்கூறிய கல்லூரிகளிலும் ஆத்தூருக்கு அருகில் ஏத்தாப்பூரில் செயல்பட்டு வரும் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையமும், திருவண்ணாமலையில் செயல்பட்டுவரும் சிறுதானிய மருத்துவ மையம், விருத்தாசலத்தில் செயல்பட்டுவரும் மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் திண்டிவனத்தில் செயல்பட்டுவரும் எண்ணெய்வித்துகள் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றைத் தொடர்புகொண்டு விவசாயிகள் பயிர் சார்ந்த ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எனவே, ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அந்த மாவட்டம், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அவர்களுடைய நடவடிக்கைக்கு நான் அதைச் சமர்ப்பிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.*

திரு. ஆர்.எம். சின்னதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தரப்படும் என மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். இருந்தாலும், ஆத்தூர் தொகுதியில் கிட்டத்தட்ட 120 ஏக்கர் விதைப் பண்ணை என்ற அரசு நிலம் உள்ளது. கருமந்துறையில் 1,500 ஏக்கர் அரசு நிலம் இருக்கிறது. ஆகவே, இந்தக் கல்லூரி அமைப்பதற்குப் போதுமான இடவசதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக்*

[2017 மார்ச் 21

கடமைப்பட்டுள்ளேன். இந்தப் பேரவையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

59—

வீட்டுமனைப் பட்டா

***5388—திரு. மா. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, சைதாப்பேட்டையிலுள்ள கிராமநத்தம் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை கிராமத்தில் கிராமநத்தம் பகுதியில் குடியிருக்கும் 1,127 வீட்டுமனைகள் கண்டெடுக்கப்பட்டு அவற்றில் 842 வீடுகள் 100 சதுர மீட்டருக்கு குறைவான பரப்பளவைக் கொண்ட வீடுகள் என்பதால் வட்டாட்சியர், மாம்பலம் அவர்களால் தோராயப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்களுக்கு தோராயப் பட்டா வழங்க ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS